1995 ஏப்ரல் 17]

வினா எண் 318, செல்வி கோ. மல்லிகா, இருக்கையில் இல்லை.

வினா எண் 319, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்.

319—

வால்பாறையை சுற்றுலா மையமாக்குதல்

*20124 டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருவதால், வால்பாறையை சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

கோவை மாவட்டத்திலுள்ள புதிய உலாத்தலம் தேர்வு செய்யப்படும் போது வால்பாறையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் வால்பாறைப் பகுதியில் சுற்றுலா ஸ்தலங்கள் அதிகமாக இருக்கின்றன என்பதை ஆராய்ந்து சுற்றுலாத் துறையின் மூலமாகவும், கோவை மாவட்டத்தினுடைய நிர்வாகத்தின் மூலமாகவும், கோவை மாவட்டத்தில் நடைபெற்ற வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் ஒரு தீர்மானமாகவும் தயாரிக்கப்பட்டு சுற்றுலாத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு இந்த ஆண்டிலேயே சுற்றுலாத்துறையின் மூலமாக வால்பாறை மலைப் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே இரண்டு உலாத்தலங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. கோவை மாவட்டத்திலேயுள்ள கோவை குற்றாலம் மற்றும் திருமூர்த்திமலை ஆகிய இரண்டு இடங்களை

உலாத்தலங்களாக அரசு தற்போது தேர்ந்தெடுத்துள்ளது. கோவை மாவட்டத்திலே மீண்டும் அரசு புதிய உலாத்தலங்களை தேர்வு செய்யும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று. வால்பாறை மிகச் சிறந்த ஒரு சுற்றுலா பகுதியாக மாறி வருவதால், வால்பாறை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த ஆண்டுகூட வருகிற மே மாதத்தில் கோவை மாவட்டத்தினுடைய நிர்வாகத்தின் சார்பாக வால்பாறையில் கோடை விழா ஒன்று நடைபெற இருக்கிறது. இதற்காக சுற்றுலாத் துறையின் மூலமாக மானியமும் சலுகைகளையும் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடிதங்கள் எழுதி இருக்கிறார்கள். இவைகளையும் கருத்தில் கொண்டு. இந்த ஆண்டினுடைய பகுதி-2 திட்டத்தின் கீழாவது கூடிய விரைவில் வால்பாறையினுடைய மலைப் பகுதியை சுற்றுலாப் பகுதியாக எடுத்துக் கொண்டு அதற்குத் தேவையான நிதி உதவியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஆண்டு பகுதி-2 திட்டத்தை ஏற்கெனவே அரசு முடிவு செய்துவிட்டது. எனவே. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்ப வருங்காலத்திலே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 320. திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

320—

ஒசூரில் தொழில் கூடங்கள் நிறுவுதல்

***38679—** *திரு. கே.ஏ. மனோகரன்:*

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓசூர் பகுதியில் கதர் மற்றும் கிராம தொழில் வாரியம் மூலமாக ஊதுபத்தி வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழில் கூடங்களை நிறுவ அரசு ஆவன செய்யுமா?